மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் அளித்த விளக்கத்திற்குப் பிறகு இந்த ஒற்றிவைப்புத் தீர்மானத்திற்கு அவசியமில்லை என்று கருதி இதற்கு அனுமதி மறுக்கிறேன்.

(3) கவன ஈர்ப்பு.

தீவுத் திடலில் கட்டடம் கட்டுவதற்கு மத்திய அரசு பாதுகாப்புத் துறை மேற் கொண்டுள்ள நடவடிக்கை குறித்து.

திரு. இராம. அரங்கண்ணல் : பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை 41-வது விதியின்கீழ் "சென்னை" மாநகரின் மையத்திலுள்ள தீவுத் திடலில் கட்டடம் கட்டுவதற்கு இந்திய அரசின் பாதுகாப்புத் துறை மேற் கொண்டுள்ள நடவடிக்கை குறித்தும், பொதுச் சுகாதாரத்திற்காகவும் மாநகரின் எழில் பாதுகாக்கவும் வேண்டிய அந்த இடத்தைத் திறந்த வெளி யாக வைத்திருக்க வேண்டியதன் அவசியம் பற்றிய அவசரப் பொதுமுக்கிய மான காரியத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : கடந்த சில ஆண்டுகளாக பாது காப்புத்துறைப் பணியாளர்களுக்கான இட வசதித் தேவைகள் அதிகரித்துள்ள தாலும், பாதுகாப்புப் படையினருக்கு இதற்காகச் சென்னையில் தகுந்த நிலம் கிடைக்கவில்லை என்பதாலும், தீவுத் திடலில் ஒரு பகுதியில் கட்டிடங்கள் கட்டுவது தவிர்க்க முடியாத அளவுக்கு அவசியமாகி விட்டது என்று மத்தியப் பாதுகாப்பு அமைச்சர் கூறியுள்ளார். தீவுத் திடல் முழுவதையும் திடலாகவே பேணி வர வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி மத்தியப் பாதுகாப்பு அமைச்சருக்கு நாம் எழுதியுள்ளோம். பாதுகாப்புத் துறையினரின் இட வசதித் தேவைகளை நிறைவு செய்வதற்காக வேறிடத்தில் நிலம் வழங்குவ தாகவும் நாம் ஒப்புக் கொண்டுள்ளோம். இது தொடர்பாகப் பாதுகாப்பு அமைச்சரின் பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையில், தீவுத் திடலில் கட்டிடப் பணிகள் தொடங்கி விட்டதால், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த 17 நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய பிரதிநிதிகள் குழு ஒன்று அண்மையில் தலைமையமைச்சர் அவர்களைச் சந்தித்து, தீவுத் திடலில் கட்டிடங்கள் கட்டுவதை நிறுத்த வேண்டுமென்று பாதுகாப்பு அமைச்சகத்துக்கு உத்தரவிட வேண்டுமென்று முறையிடு செய்து கொண்டது. நகராட்சி மன்ற உறுப்பினர் திரு. டி. சாரங்கன் இப்போது சென்னை உயர்நீதி மன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார். தீவுத்

திடலில் பாதுகாப்புத் துறை உத்தேசித்துள்ளபடி கட்டிடங்கள் கட்டும் பணி தொடர்ந்து நிறைவேற்றப்படாமல் இந்திய அரசு இரு வாரங்களுக்கு நிறுத்தி வைக்க வேண்டுமென்று இடைக்காலத் தடை ஆணை ஒன்றை உயர்நீதி மன்றம் பிறப்பித்தது. இது தற்போது நீதி மன்ற விசாரணையிலுள்ளது.

(4) அரசினர் தீர்மானங்கள்.

(அ) மதிப்பீட்டுக் குழுவிற்குத் தேர்தல்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, "தமிழ்நாடு சட்டப் பேரவையின் 164-வது விதியின்கீழ் 1972-73-ஆம் ஆண்டுக்குரிய மதிப்பீட்டுக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி பதினாறு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப் பேரவை தேர்ந்தெடுக்கும்" என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

(5) அறிவிப்புகள்.

(அ) மதிப்பீட்டுக் குழுவிற்குத் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. ஒற்றை மாற்று வாக்கு முறைப்படி தேர்தல் நடத்துவதற்குப் பேரவைத் தலைவர் வகுத்துள்ள விதிமுறைகளின் கீழ், மதிப்பீட்டுக் குழுவிற்கு Estimate Committee பதினாறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு, வேட்பாளர்கள் நியமனத் தாள்களை 22-3-1972, புதன்கிழமை, முற்பகல் 11-00 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத்தாள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

நியமனத்தாள்கள் 23—3—1972, வியாழக்கிழமை, முற்பகல் 11.00 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 24-3-1972, வெள்ளிக்கிழமை முற்பகல் 11-00 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது, பதினாறுக்கு மேற்படுமாயின் 27—3—1972, திங்கட்கிழமை முற்பகல் 9-00 மணிக்கும் பிற்பகல் 1-00 மணிக்கும் இடையே உறுப்பினர்கள் ஓய்வறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.